

கன்னியாகுமரி மாவட்டம், பெருமாள்புரம் மற்றும் பழவிளை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் உள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கட்டப்பட்டுள்ள ரூ.11.44 கோடி மதிப்பிலான 172 குடியிருப்பு வீடுகள் திறப்பு விழா மற்றும் ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் புதிய 90 வீடுகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது இதில் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் புதிய வீடுகளை திறந்து வைத்து புதிய வீடு அமைப்பதற்கான அடிக்கல் நட்டு வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் அழகு மீனா, நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் செ.ராஜேஷ்குமார், மேயர் மகேஷ் மற்றும் அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



திருச்சி மாவட்டம் சூரியூர் ஜல்லிக்கட்டு விளையாட்டு மைதானம் ஒன்று அமைத்து தர வேண்டுமென திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழியிடம் சூரியூர் கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் இன்று(19ஆம் தேதி) ஜல்லிக்கட்டு விளையாட்டு மைதானத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு துணை முதல்வர் வருகை தருவதையொட்டி ஜல்லிக்கட்டு விளையாட்டு மைதானம் நடைபெறும் இடத்தினை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு செய்தார். மேலும் பணிகள் எவ்வாறு நடைபெறுகிறது என்றும் கேட்டறிந்தார் மேலும் இந்நிகழ்வில் திருவெறும்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கங்காதரன், உதயகுமார் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சண்முகசுந்தரம் உட்பட பலர் உடன் இருந்தனர்.



சென்னை, கன்னிகாபுரம் அரசு ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று முன்தினம் (17.02.2025) நடைபெற்ற ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் எச்டிஎப்சி வங்கி இணைந்து நடத்தும், நிதி கல்வி அறிவு திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியை, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் ஆகியோர் தொடங்கி வைத்து, சிறந்த ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் டி.ஆனந்த், எச்எஃப்சி சென்னை மண்டல அலுவலர் பாலாஜி கிருஷ்ணாமாச்சாரியார், எச்டிஎப்சி வங்கி உயர் அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி - ஆ.மணி எம்.பி. சிறப்புரை!

தருமபுரி, பிப். 19-

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் ஆணைக்கிணங்க தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் குமாரசாமி பேட்டை செங்குந்தர் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் சி.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ சுப்ரமணி, தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. ஆகியோர் கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 72வது பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடுதல், தமிழ் நாட்டை தொடர்ந்து புறக்கணிக்கும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது, வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் எவ்வாறு பணியாற்றிட வேண்டும் என்பது குறித்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள்.

கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் இரா.தாமரைச் செல்வன், ஆர்.பி.செந்தில் குமார், மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ரேணுகாதேவி, உமாசங்கர், ஆறுமுகம், நகர செயலாளர் நாட்டான். மாது, ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.காவேரி, ஏ.எஸ். சண்முகம், எரியூர்.செல்வராஜ், கருணாநிதி, முருகேசன், மல்லமுத்து, வீரமணி, வைகுந்தம், பேரூர் கழக செயலாளர்கள் வீரமணி, சண்முகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், நகர நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் 2வது கட்ட மக்கள் குறை தீர்க்கும் முகாம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்!

மயிலாடுதுறை, பிப். 19-

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் ஏற்பாட்டில் இரண்டாம் மக்கள் குறைதீர்க்கும் முகாம் செம்பனார்கோயில் ஒன்றியம் திருக்களாச்சேரியில் நடைபெற்றது. முகாமிற்கு, மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். செம்பனார் கோயில் அப்துல் மாலிக் வரவேற்றார்.

சீர்காழி சட்டப் பேரவை உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, மயிலாடுறை சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மக்களின் நலனின் முதலமைச்சர் மக்கள் குறை தீர்க்கும் வாகனத்தை தொடங்கி வைத்து பேசுகையில்,

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருக்கின்ற பொழுது தொடங்கிய மகத்தான திட்டம் 1969ல் முதல் முறையாக தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில் மக்கள் குறைதீர்க்கும் முகாமை நடத்திக் காட்டி மக்களுடைய கோரிக்கைகளை மக்களிடம் பெற்று நிறைவேற்றிய இந்தியாவின் ஒரே முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அப்படி தொடங்கிய முகாமில் தான் முதல் முறையாக முதியோர் உதவி தொகை அறிமுகம் செய்யப்பட்டது. 1969 இல் வழங்கப்பட்ட முதியோர் உதவி தொகை 20 ரூபாய். ஏன் இதை குறிப்பிடுகிறேன் என்றால் விளிம்பில் இருக்கின்ற அடித்தட்டு மக்களை சிந்திக்கக்கூடிய சிந்தனையை 55 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த தமிழ் மட்டும் மட்டுமல்ல இந்தியா முழுவதும் விதைத்து சென்றவர் தலைவர் கலைஞர் அவர்கள் அந்த அடிப்படையில் ஆட்சி பொறுப்பேற உடனே நம்ம முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே மனுக்களை பெற்று அந்த மனுக்களுக்கு இது வரை தீர்வு கண்டிருக்கிறார்.

இன்றைக்கு மக்களின் முதல்வர் என்ற மகத்தான திட்டத்தின் மூலமாக 14 துறைகளை கொண்ட மிகப் பெரிய முகாம்களை நடத்தி மணுக்கள் பெறப்பட்டு அதற்கும் இன்றைக்கு தீர்ப்பு வழங்குகின்ற முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம். அந்த அடிப்படையில் இந்த நூறு ஊராட்சிகள், இரண்டு பேரூராட்சிகளை கொண்ட இந்த பூம்புகார் தொகுதி என்பது ஒரு வரலாற்று சிறப்பு வாய்ந்த ஒரு மிகப்பெரிய பாரம்பரிய மிக்க ஒரு சட்டமன்ற தொகுதி இதில் பல்வேறு வரலாற்றுத் தலங்கள் சுற்றுலாத்தலங்கள் எல்லாம் நிறைந்த இந்த பூம்புகார் மண்ணில் இன்றைக்கு நாங்கள் இந்த விழாவிற்கு வருவதற்கு முன்பாக தில்லையாடி சென்றோம். அந்த இடத்தை பார்த்து விட்டு அந்த இடத்தில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை நினைவிடத்தை நாம் மீண்டும் புதுப்பிப்பதற்காக துறையினுடைய அமைச்சரிடத்தில் பேசி இருக்கிறோம். விரைவில் அந்த நினைவிடத்தை புதுப்பிப்புக்காக நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறோம். ஏன் என்றால் 1939 ஆண்டு தென் ஆப்பிரிக்காவில் அந்த இனவெறிக்கு, நிறவெறி போராட்டத்தில் பங்கெடுத்த வந்த இந்த மண்ணில் பிறந்தவர். நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசினார். ஒன்றிய அரசாங்கம் இந்த மக்களுக்கான நையா பைசா கூட கொடுக்கவில்லை என்று சொல்கிறார். அது உண்மை இன்றைக்கு பாருங்கள் 100 நாள் வேலைக்கு கொடுக்க வேண்டிய சம்பளத்தை கூட கொடுக்கவில்லை, பள்ளிக்கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய ரூ.2152 கோடி நம் பிள்ளைகள் 40 லட்சம் பிள்ளைகள் உடைய கல்விக்கான தொகை இந்த ரூ. 2142 கோடி அந்த தேசிய கல்விக் கொள்கையை ஏற்காத காரணத்தால் நம் தொகையை பிற மாநிலங்களுக்கு பிரித்து கொடுக்கிறார் என்றால் எவ்வளவு பெரிய அநீதியை இன்றைக்கு இந்த நாட்டினுடைய பிரதமர் தமிழ்நாட்டு மக்களுக்கு இழைத்திருக்கிறார் என்பதை தயவு செய்து சிந்தித்து பாருங்கள் 100 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த மண்ணில் சிறுபான்மை மக்கள் இந்த பல்வேறு இடங்களில் கல்வி நிறுவனங்களை தொடங்கி கல்வி தந்தார்கள் ஆனால் இன்றைக்கும் நமக்கான அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது. அந்த அடிப்படையில் இங்கு வருகை தந்த பொழுதும் மனு கொடுத்தார்கள் திருக்களாச்சேரி ஊராட்சியில் முபாரக் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஒருமனுவை தந்து அதில் கிட்டத்தட்ட 2500 பேர் இருக்கிறார்கள் அவர்களுக்கு நான்கு புதிய சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள் நமது சட்டமன்ற உறுப்பினரும் உறுதி தந்திருக்கிறார் நானும் உறுதி தருவேன். இந்த மனுவிற்கு இரண்டு புதிய சாலைகள் முதலமைச்சர் கிராம சாலை திட்டத்தில் நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அதே மாதிரி இந்த மனுக்களில் வரப்படுகின்ற கலைஞரின் கனவு இல்லம் கேட்டு கொடுக்கின்ற மனுக்களை நமது சட்டமன்ற உறுப்பினர் அதனுடைய ஒரு ஜெராக்ஸ் பிரதியை என்னிடத்திலும் வழங்க வேண்டும் வாய்ப்பிருந்தால் அவர்களுக்கு அந்த கலைஞரின் கனவெல்லாம் வீடுகள் பெற்று தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். மற்ற மனுக்களுக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பூம்புகார் தொகுதி முழுவதும் மக்கள் குறைகள் ஒரு வாகனத்தையே இன்றைக்கு எல்லா ஊராட்சிக்கும் சென்று மனுக்களை பெற ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருக்கிறார். மக்கள் பிரதிநிதியாக 200 சதவீதம் இந்த தொகுதி மக்களுக்காக அவர் பாடுபட்டு உழைத்துக் கொண்டிருக்கிறார். அதற்காக அவரை பாராட்டுக்கள் வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றைக்கு இந்த பூம்புகார் தொகுதி முழுவதும் மனுக்கள் பெறுகின்ற இந்த நடவடிக்கையை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து இந்த மக்களுடைய உயர்ந்த எண்ணத்தில் செயல்படுகின்ற நமது பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா முருகனுக்கு உங்கள் சார்பாக எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் எம். எம். சித்திக், இலக்கிய அணி மாநில துணை செயலாளர் சௌமியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், ஜி.என்.ரவி, மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேல், எஸ். செல்வமணி, ஒன்றிய செயலாளர்கள் எம்.அப்துல் மாலிக், பி.எம். அன்பழகன், அமிர்த்த விஜயகுமார், ப. முருகமணி, சீர்காழி நகர கழக செயலாளர் ம. சுப்பராயன், பொது பொதுக்குழு உறுப்பினர் ஹர்சத் :முன்னாள் ஒன்றிய குழ தலைவர் மகேந்தின் மாவட்ட இளைஞர் அணி அமைபாளர் எம்.கே.மருது, தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்து ராஜா, தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரிகுமரவேல், ஒன்றிய துணைச் செயலாளர்கள் திருவிளையாட்டம் இளங்கோவன், சிவகுமார், செல்லம்மாள் பன்னீர்செல்லம், பொருளாளர் ரங்கராஜ், மாவட்டப் பிரதிகள் ஈச்சங்குடி இளங்கோவன், கே.எஸ்.எஸ். கருணாநிதி, கே.பி.ராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வினோத் பாண்டியன், மாவட்ட விவசாயத் தொழிலாளர்களை துணை அமைப்பாளர் திருக்கடையூர் செந்தில், மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் சாதிக், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் மதியழகன், அறிவழகன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ரபீக் பைலட், விஸ்வநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை :

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் - வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவிப்பு!

திருவள்ளூர், பிப்.19-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் வேண்டுகோள் வருமாறு:-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (19.02.2025 புதன்கிழமை) மாலை 4.00 மணியளவில் மீஞ்சூர் பாலகோட்டி திருமண மண்டபம் வளாகத்தில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமை வகிக்கிறார். ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மு.மணிபாலன், கி.வே. ஆனந்தகுமார், டி.கே. சந்திரசேகர், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேல், கா.சு.ஜெகதீசன், ஜான்பொன்னுசாமி, ந.பரிமளம், மு. முரளிதரன், ஜி.ரவிக்குமார், இரா.அறிவழகன், அபிராமி குமரவேல், பி.முத்து, மீஞ்சூர் பேரூராட்சித் தலைவர் ருக்மணி மோகன்ராஜ் ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வ நாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்த பொது உறுப்பினர் கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இதில் டி.ஜெ.கோவிந்தராஜன், இ.ஏ.பி.சிவாஜி, தமிழ் க.அமுதரசன், அழகிரி சதாசிவம், சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஏ.கே.சுரேஷ் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் வார்டு கழக செயலாளர்கள் கிளைக் கழகச் செயலாளர்கள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டம் முடிவில் மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு. தமிழ்உதயன் நன்றி கூறுகிறார்.

பொருள்: 1. கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு நலத் திட்ட உதவிகள் பொதுக்கூட்டங்கள் நடத்துவது குறித்து.

2. 2026 வருகின்ற சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து.

3. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தி.மு.க. நெசவாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

தி.மு.க. நெசவாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்துரை யாடல் கூட்டம் 25-2-2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் எனது தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம் அவர்கள் வரவேற்புரையாற்றிட, செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, காஞ்சிபுரம் தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை சொ.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன் - துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா; 2. ஆக்கப் பணிகள் குறித்து,

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
நாள்- 17.02.2025

**நன்னியூர் இராஜேந்திரன்**
செயலாளர்,
தி.மு.க. நெசவாளர் அணி



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (17.02.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் கலை பண்பாட்டுத் துறை மற்றும் அருங்காட்சியகங்கள் துறைகளின் சார்பில் சட்டமன்ற கூட்டத் தொடரில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், அருங்காட்சியகங்கள் துறை ஆணையர் மற்றும் கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (பொ) திருமதி கவிதா ராமு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் விஜயா தாயன்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சென்னை, சைதாப்பேட்டையில் நேற்று முன்தினம் (17.2.2025) தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிறைவு போட்டியில் வெற்றி பெற்ற 37 மாவட்டங்களைச் சேர்ந்த 333 மாணவர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, கல்லூரி கல்வி இயக்கக ஆணையர் எ.சுந்தரவல்லி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.